NALLUR BRANCH LIBRARY

News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly : Published Every Friday
Vol:- 155 Jaffna, Friday 20. May 1994 No: 12
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs. 100/-
For Advertisements
Apply to:
THE MANAGER
'The Morning Star
Diocesan office,
Vaddukoddai

# A success that speaks Volumes

## The library movement in Kerala

Kerala is known for its many unique features, That it has highest density of population and literacy are already well-known. Its position as the first State to elect a Communist Government just after independence is also equally famous. Its widely publicised cabinet instability has been surpassed only recently by other Indian States. But the library movement, of which very little is known outside Kerala has in fact become the symbol of Kerala's cultural upsurge Grandhasala Sangham which is the core of cultural life of Kerala had a democratic election for the first time in its history.

The organisation which helped Kerala to become the most literate State in India is still continuing its untiring efforts to educate awaken people The 5239 libraries all over Kerala under this organisation have had a significant part in the incessant campaign against illiteracy, the active efforts for higher education, the vigorous participation in the awakening of people and reconstruction of the country and last, but not the leas the leap towards a cultural renaissance.

Kerala has fascinating social history. Cultural streams from various lands joined here The inter-play of diverse social forces moulded. Kerala's society, imparting to it a broad and receptive nature. In fact, it wouldn't be an exaggeration to say that a cultural revolution took place in Kerala through its rural libraries, Through the ages many cultural currents flowed to this beautiful, receptive land and many an orginal, theuhht has bloomed here. All because of this library movement.

"We should think over what we have read, digest it and make it an integral part of our daily life," said Gandhiji. while talking about books and this forms the main motto of Kerala Grandhasala Sangham, the foremost library movement in India, which has won accolades from UNESCO, winning its 'Krupskaya Award' (1975) and from other national leaders for the laudable performance of the Sangham. The untiring efforts of the initial workers of the Sangham and the subsequent torch-bearers have been amply rewarded by a new Library Act by which elections were held for the first time in India. Thus the aspirations of thousands have finaly come true.

Libraries are no longer the sanction of the chosen few but a hospitable house of knowledge catering to the most elementary as well as the most advanced requirements of the people. The widening of the library service as a means of self education as well as an instrument of mass education is the hallmark of the concept of library movement as it is today.

(Continued to page 4)

## Letter to the Editor

Vanakkam!

I pass on greetings from the Uniting Church in Australia and many Tamils in Sydney and Melbonrna whom I met before leaving Australia, My work in Batticaloa has just begun with the boys and girls of the Orpharage and in the Couple of weeks have been here is proved to be enjoyable and interesting at the same time it is certainly interesting trying to teach English to the boys when I know only a little Tamil and they a small amount of English. So I am trying hard to learn your language and in a couple of months I hope to be able to have a conversation in Tamil. My time in Batticaloa and Colombo has been full of Tamil generosity and I have enjoyed it immensely. I look forward to my year in Sri Lanka working with the boys and girls of the orphanage and visiting various parts of this Country. Hope to see some of you during my stay.

Bye Bye
CHRIS WRIGHT
Uniting Church, Australia.

## Trustees Meeting

The annual meeting of the Board of Trustees of Jaffna College will take place on the 3rd of June 1994 Rt. Rev. D. J Ambalavanar and Mr. G: Rajanayagam will attend this meeting

## Jaffna College Sports Meet

The Jaffna College Senior annual inter-house athletic meet was held in the Bicknell Field on Saturday the 14th May 1994 at 2-30 p, m.

Dr. T W. Jeyakularajah, President Jaffna Christian Union & President Jaffna Y. M. C. A. and Mrs. Christina Jeyakularajah were the Chief guests.

Hitchcock House emerged Champions

Dr. Jeyakularajah stressed the importance of sports. 'Sports and Studies are like two eyes of a man. If one doesn't function the vision is impaired. Unfortunately because children are unduely burdened with studies they have no time for sports, this is lamentable' he said.

Mrs. Jeyakularajah gave away the certificates & trophies,

The Jaffna College Primary School annual inter-house athletic meet was held in the Bicknell Field on Friday the 20th May 1994 at 2 00 p. m. Mr. C. Jeyaratnam, Manager of Jaffna College and retired Deputy Director of Agriculture, and Mrs C Jeyaratnam daughter of late Chinnappa, Bursar, Jaffna College were the Chief Guests, Hitcock House emerged Champions

Mr. Jeyaratnam stated that children should play during the leisure times, then only they can be happy and healthy.

Mrs. Jeyaratnam, distributed Certificates and trophies.

## Water Pump Dedicated at Vaddu Hindu Primary School

On April 28th Lions Club of Vaddukoddai dedicated a water pump at Vaddu Hindu Primary School. Dr. Robert G. Porter cut the ribbon The pump had been requested by both Lion K. Gunaratnam and former Cluster Principal Das. a close relation of the K. A. Sellah family, and whose children are graduates of Jaffna College.

The school put on a festive programme under Primary School Headmaster Mr. V. Sivanandan and Mrs K. Sivaganeshan. The Vaddu Hindu College Principal presided. and School Development Treaurer Mr. T. Shanmugaligam, was also present Staff members Mr. K. Ratneswarn. Miss S. Ragunathan, Miss S. Kamaladevi and Miss A. Latha assisted the children with their charming items and provided refreshments Lion President R. T Ramachandran, Lion Dr. Paheirathan, Lion Secretary A. Tharmakulasingham. Lion Treasurer Dr. K. Radakrishnan and Lion P. L. Manuelpillai were present for the ceremony as well.

## BIBLE QUIZ

The Annual Bible Qniz organized by the Bible Society of Ceylon and sponsored by the Jaffna Y. M. C. A. was conducted at St. Johns College on Saturday 21st May 1994 20 teams particapated in the under 16 group and 19 teams in the under 12 group.

Under 12 champions were Chundikuli Girls' College and runners up Trumpet Sounds Church Jaffna under 16 champions were St. James Church Nallur and runners up Holy Trinity Church, Kokuvil.

The champion of both age groups will go to Colombo for all Island Bible Quiz Competition.

## 'Someone Watch Over Me' by Dr. R. G. Porter

George and Ira Gershwing's hit tune has become a watch word in human rights. Peace Brigades International has been quietly working for some time in Sri Lanka as well as many other countries in the world where individuals are in danger of brutality, disappearance or assassination. Through a church member of the St. John's United Church of Christ in Vermont I was able to correspond with a young woman who had served in Sri Lanka and learnt about the activities of this group first hand.

(Continued to page 4)

அந்தியட்சர் எழுதும்

# அவுஸ்திரேலிய நினைவுகள்

சிட்னி மாநகரில் டிசம்பர் 12-ம் திகதி ஒரு நத்தார் ஆராதனை நடைபெற்றது. வருடந்தோறும் நடைபெறும் இத்தமிழ் நத்தார் ஆராதனை உலகப்பிரசித்தி பெற்றது. சிட்னியிலும் அதனைச்சூழவுள்ள பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய ஆயிரம் பேர் இவ்வழிபாட்டுக்கு வருவர். யாழ்ப்பாணத் தமிழர் மாத்திரமன்றி ஆங்கிலேயர், இந்தியர், சிங்களவர் ஆகியோரும் வருவர். இந்நத்தார் ஆராதனை சிட்னி மாநகரின் ஒரு முக்கியமான கலை நிகழ்ச்சி இந்த ஆராதனையில் நான் நத்தார்ச்செய்தியைக் கூறவேண்டுமென ஒழுங்காகி இருந்தது அறுபது, எழுபதுகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரிகளதும் நத்தார் ஆராதனையை ஒத்ததாக இஃதிருந்தது ஆராதனை மண்டபம் மக்களால் நிரம்பி வழிந்தது பலவித கமிராக்கள் படம் எடுத்த வண்ணமிருந்தன. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் சாவகச்சேரித்திருச்சபையைச்சேர்ந்த திரு சோதிதாஸ் ஐயாத்துரை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார், தென்னிந்திய திருச்சபையைப்பற்றியும் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையைப் பற்றியும் அவர் எடுத்துக்கூறினார். இவ்வாராதனையிலே பயன்படுத்தப்பட்ட தமிழ் இசைக்கருவிகளை யாழ்ப்பாணத்தில் கூட காண முடியாது. இந்தியாவிலிருந்து பெருந்தொகைப்பணச்செலவில் இவ்விசைக்கருவிகளை அவர்கள் வாங்கியுள்ளனர். இக்கருவிகளை மீட்டக்கூடிய மிகச்சிறந்த இசைவாணர்களும் அங்கு காணப்படுகின்றனர்.

இந்த ஆராதனையிலே நான் பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது ஒரு சலசலப்பு ஏற்பட்டது. ஏனெனில் அங்கு வழிபட வந்திருந்த வயோதிப பெண்ணொருவர் இடநெருக்கடி காரணமாக மயங்கி விழுந்து விட்டார். எனவே அவரைக்கொண்டு சென்று சிகிச்சையளிப்பதற்காக தொண்டர்கள் அங்குமிங்கும் ஓடினர். நான் சிறிது நேரம் பிரசங்கத்தை நிறுத்திவிட்டு அவர்களது முதலுதவிப்பணிகளைக் கவனித்துக்கொடிருந்தேன். சிறிது நேரத்தின் பின் வழிபாடு மீண்டும் ஆரம்பித்தது, வழிபாடு முடிந்த பின்னர் ஒரு ஐக்கிய தேனீர் விருந்து நடைபெற்றது. சிதறுண்டு வாழும் தமிழ்க்கிறிஸ்தவர்கள் இவ்வளவு பெருந்தொகையினரா என்று யான் நினைத்தேன், அடுத்த நாள் சிட்னியிலிருந்த குடிவரவு விசாரனை மன்றம் தமது பணிமனைக்கு வருமாறு என்னை அழைத்தது சிலருக்கு குடியுரிமை வழங்குவதுபற்றி சில பிரச்சனைகள் உள்ளன என்றும் இலங்கைப்பிரச்சனைகளைப் பற்றித்தாம் திட்டமாக அறிய வேண்டுமென்றும் அவர்கள், என்னிடம் சில விடயங்கள் குறித்துக் கேட்டனர். திருமதி ஜெனட் வூட என்ற அம்மையாரே என்னை இவ் விசாரனை மன்றுக்கு அழைப்பதற்குக்காரணமாக இருந்தார், அன்று மாலை திரு, விக்டர் இராஜகுலேந்திரன் அவர்களைச்சந்தித்தேன். அன்று மாலை 3-30 மணிக்கு நான் அவரோடு எதிர்பார்த்திருந்த ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றேன்.

நான் இளைஞனாக ஆசிரியத் தொழிலைக் கண்டிப்புனித அந்தோனியார் கல்லூரியில் ஆரம்பித்த போது எனக்கு அதிபராக இருந்தவர் வண பிதா D.I றொபின்சன் அவர்களாவர். இவர் ஒரு கத்தோலிக்க மதகுருவாவர். இவர் இளைப்பாறிய பின்னர் அவுஸ்ரேலியாவுக்குச்சென்று ஒரு மடாலயத்தில் வாழ்ந்து வருகின்றார். இவரை நான் மீண்டும் சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. திரு சுகுமார் அவர்களுடன் இம்மடாலயத்திற்குப் புறப்பட்டேன். வண.பிதா. றொபின்சன் அவர்கள் எனது விஜயத்தைப் பற்றி அங்கிருந்தவர்



களுக்குக் கூறியிருந்தார். எனவே வெகு சுலபமாக அவருடைய அறைக்குள் அழைத்துச் சென்றனர். இவருடன் சில மணித்துளிகள் புனித. அந்தோனியார் கல்லூரியைப்பற்றியும், அதன் பழைய மாணவர்களைப் பற்றியும் உரையாடினோம், பின்னர் இருவருமாகப்புகைப்படங்கள் எடுத்துக் கொண்டோம். இக்கத்தோலிக்க மதகுரு மிகவும் இனியமனமுடையவர். நான் வாலிப ஆசிரியனாகப்பல குறும்புகள் செய்தபோதும் "என்னுடைய தோழனுமாய் நான் செய்யும் துரிசுகளுக்குக்குருவாகி நின்றவர்". ஆகவே அவரைச் சந்தித்து நன்றி தெரிவிக்கையில் எனக்குப் பெரும் மனநிறைவு ஏற்பட்டது. அன்றிரவு பி.ப 6-45 மணிக்கு சிட்னி வாழ் யாழ்ப்பாணக் கல்லூரிப்பழைய மாணவர் சங்கத்தினர் எனக்கு ஒரு இராப்போசன விருந்து அளித்தனர். இவ்விருந்திலே எனது ஆசிரியர்களும் இருந்தனர். நான் படித்த காலத்திலே யாழ்ப்பாணக்கல்லூரியில் படித்தவர்களும் இருந்தனர் எனது மாணவர்களும் இருந்தனர் இந்த இராப்போசனத்திற்குதிரு விக்டர் துரைசுவாமியவர்கள் தலைலைதாங்கினார். யாழ்ப்பாண கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு. ஆ. விசுவநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நான் படித்த காலத்திலே யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்த திரு. ஜெயகாந்தன், திரு. கணபதிப் பிள்ளை, திரு. இரத்தினேசன், திரு, சிவானந்தன் ஆகியோரைச் சந்தித்தது எனக்குப் பெருமகிழ்வினைத்தந்தது. அன்று மாலை டாக்டர் எஸ். சற்குணராசா அவர்களது இல்லத்தில் நான் தங்கினேன். இவர் எனது தாயாரின் மூத்த சகோதரியின் மகனாவார். இவருடனும் இவரது பிள்ளைகளுடனும் நள்ளிரவுவரை பேசிக்கொண்டிருந்தோம். இரண்டாவது மகன் பிரேம் அன்று அங்கிருக்கவில்லை. ஏனையோருடன் உரையாடினேன். டாக்டர் சற்குணராஜா அவர்கள் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் நிவாரணப் பணிகளுக்கென 350 டாலர்களைத் தந்துதவினார்.

அடுத்த நாள் நான் டாக்டர் சற்குணராஜாவின் வீட்டிலிருந்த போது. டாக்டர் விஜோ விசுவலிங்கம் என்னைச் சந்திப்பதற்காக வந்தார். அவரும் என்னைச் சில அரச உத்தியோகத்தர்களிடம் அழைத்துச்சென்றார். இதன் பின்னர் சிட்னி மாநகரைச் சுற்றிப் பார்த்தோம். இங்கு துறைமுகமே மிகப்பிரசித்தமானது நான் சிட்னியிலிருந்தபோது சாவகச்சேரியைச் சேர்ந்த திரு பாலரத்தினம் சத்தியராஜ் அவர்களும், அவரது பாரியாரும் என்னை வந்து சந்தித்தனர். இவர்களது திருமணத்தை நான் 1991-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பெங்களூரில் நடாத்தி வைத்தேன். இப்பொழுது கணவனும், மனைவியுமாக அவர்கள் சிட்னியில் வாழ்வது எனக்குத் திருப்தியளித்தது.

அன்று மாலை 7-00 மணிக்கு திரு. பொ. தயானந்தன் அவர்களது வீட்டிற்குச் சென்றோம். திரு தயானந்தன் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் இருபைநாயகம் தம்பதியினரின் மகள் சுசிலாவைத் திருமணம் செய்தவர் திரு தயானந்தன் எனது தாயாரின்இரண்டாவது சகோதரியின் மூத்தபுதல்வன். இவரை நாம் எல்லோரும் 'அண்ணை' என்றே அழைப்போம். இவரது வீட்டிலே இவரது மாமியார். மகன் கிருபன் மகள் கவிதா ஆகியோர் இருந்தனர். அவர்களுடன் நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்தோம் திரு சுகுமார் திருமதி சாந்தா ஜெகநாதன் ஆகியோரும் ஆங்கு வந்திருந்தனர் நீண்ட நேரமாக நாம் பேசிக் கொண்டிருந்தோம். ஏனெனில் அதுவே எனது அவுஸ்திரேலிய விஜயத்தின் கடைசி நிகழ்ச்சியாக இருந்தது.

அடுத்த நாட் காலை நான் சிட்னி விமான நிலையத்திற்குச் செல்லவேண்டியிருந்தது காலை பத்து மணிக்குத் திரு சுகுமாரின் காரில் திருமதி சாந்தா ஜெகநாதன் திரு. தயானந்தன் ஆகியோர் சகிதம சிட்னி விமான நிலையத்திற்குப் புறப்பட்டோம். எனது பொதிகள் 'ஓவர் வெயிட்' ஆகிவிடக் கூடாது என்பதற்காகத் திரு. சுகுமார் அவற்றினை மிகவும் சாதுரியமாகப் போட்டுவைத்தார் காரில் விமானநிலையம் நோக்கிச்செல்லும் பொழுது வேதனையாகவிருந்தது ஆனால் அதே சமயம் பிரச்சனைகளின்றி இந்த விஜயம் முடிந்துவிட்டதே என்ற திருப்தியும் ஏற்பட்டது. எனது மனைவியும் பிள்ளைகளும் எனது அவுஸ்திரேலிய விஜயத்தின் போது இந்தியாவிலிருந்தனர். அவர்களுடன் தொடர்பு கொள்வதே கடினமாகவிருந்தது. துணிகரமான பயணத்தை மேற்கொண்டபொழுது இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டிருந்தேன்.

சரியாக மதியம் பன்னிரண்டு மணிக்கு கதே-பசுபிக் விமானம் ஹொங்கொங் நோக்கிப் புறப்பட்டது. அவுஸ்திரேலியாவின் பசுமையான நினைவுகளைச் சுமந்த வண்ணமே ஆசனத்திலிருந்தேன். நண்பர்களினதும் உறவினர்களினதும் அன்பும் பாசமும் என்னை உணர்ச்சிவசமாக்கின. என் கண்கள் பனித்துவிட்டன கை கைலேஞ்சியைத் தேடியது.

---

# யாழ்ப்பாணக் கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணக் கல்லூரி மேற்பிரிவு மாணவர்களின மெய்வல்லுநர் போட்டி சனிக்கிழமை 14-ம் திகதி மே மாதம் வட்டுக்கோட்டை பிக்னெல் மைதானத்தில் நடைபெற்றது வைதிய கலாநிதி ரி. டபிள்யூ ஜயகுலராசா தலைவர் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம், தலைவர் யாழ். வை, எம். சி, ஏ. திருமதி கிறிஸ்தீனா ஜெயகுலராசா ஆகியோர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டனர்.

ஹிச்சொக் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது. "விளையாட்டும், கல்வியும் மக்களின் இரு கண்கள். இதில் ஒன்று இல்லாவிடில் மனிதனால் பூரணமாக பார்க்க முடியாது. இன்று கல்விச் சுமையால் மாணவன் அழுத்தப்படுவதால் விளையாட்டுத்துறை பின்தங்கியுள்ளது. இது மனவருத்தத்திற்குரியது' என கலாநிதி ஜெயகுலராஜா அவர்கள் கூறி விளையாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

யாழ். கல்லூரி பிரதம பிரிவின் மெய்வல்லுநர் போட்டி நடந்த 21-5-94 ,வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் திரு. சி. ஜெயரத்தினம், யாழ்ப்பாணக் கல்லூரியின் முகாமையாளர் அவர்களும் அவரது பாரியார். திருமதி ஐ ஜெயரத்தினம், யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் கணக்காளர் காலஞ்சென்ற திரு சின்னப்பா அவர்களின் புதல்வியும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டனர்.

இங்கும் ஹிச்சொக் இல்லம் வெற்றிபெற்றது. 'பிள்ளைகள் ஒய்வு நேரத்தில் விளையாட வேண்டும். அப்பொழுதே அவர்கள் மகிழ்ச்சியாகவும், தேக ஆரோக்கியமாகவும் இருக்கமுடியுமென திரு, ஜெயரத்தினம் கூறினார்.

தாரகை ஒளி

துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாமலும்,
பாவிகளுடைய வழியில் நில்லாமலும்,
பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும்,
கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து அதை இரவும் பகலும்
தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்.


# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை

Estd 1841

மலர்: 155 20-05-1994 இதழ்: 12


## கூட்டாகச் செயலாற்றுவோம் !

ஒரு திருச்சபையின் வளர்ச்சியை - அங்கு இயங்கும் நிறுவனங்கள். சமூக அபிவிருத்தித்திட்டங்கள் ஆகியவற்றை ஓர் அளவாக வைத்துக் கணிக்கமுடியாது. மாறாக சபையாரின் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சி, வேத அறிவு வளர்ச்சி, அவர்களில் விளங்கும் நற்செய்தி விழுமியங்கள், ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த, அன்னாரின் உளப்பாங்கு ஆகிய இவைதான் திருச்சபையின் உண்மையான வளர்ச்சியின் அளவுகோலாகும்.

இன்று, திருச்சபையில் இத்தகைய உயிர்ப்பான, அன்பு, நீதி, சமத்துவம் போன்ற நற்பண்புகள் இருக்கின்றனவோவென நாம் தேடுவது அவசியம். இப்பண்புகளை, தூய ஆவியரின் துணையோடு நாம் வளர்த்து வருவோமேயாயின், இன்றைய தேவைகளுக்கேற்றவாறு திருச்சபை உயிர்ப்புடன் பணியாற்றும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய பயனுள்ள பணி ஆற்றப்படவேண்டுமேயாகில், திருச்சபையின் உறுப்பினர், குருமார், பொதுநிலையாளர் அனைவரும், திருப்பணியில் கூட்டாக ஈடுபடுவது அவசியம். அப்போதுதான், இன்றைய இக்கட்டான சூழ்நிலையில், திருச்சபை நமது சமுதாயத்தில் பல துறைகளிலும் பயனுள்ள பணியாற்றும்.

சபைப் பொறுப்பை எடுத்துள்ள குருமார், தாம் சிறப்பான குருத்துவப் பயிற்சி பெற்றதனால் சபை உறுப்பினரிலும் பார்க்க, தமக்கு அனைத்துந் தெரியுமென எண்ணி, பொதுநிலையாளரை (சபையாரை) ஒதுக்கிவிடப்படாது. சபையார் பொறுப்புக்களையேற்றால் அவர்களுக்கு, வேண்டிய ஆர்வம் தானாகவே வரும். எனவே, குருமார் தனித்து இயங்குவதைத் தவிர்த்து, சபைப் பொறுப்புக்களைத் தமது சபையாரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும்.

நமது சபையாரில் பல திறமைகள் மறைந்துகிடக்கின்றன. அவர்கள் ஒவ்வொருவருக்கு இறைவன் கொடுத்துள்ள திறமைகளை, அவர் மகிமைக்காக தம் சபைகளிலும் தாம் வாழும் வட்டாரங்களிலும் பயன்படுத்த அவர்களை ஊக்குவிக்கவேண்டும். தமக்கு அளிக்கப்பட்ட திறமைகளை, பிறர் நலத்திற்காகப் பயன்படுத்தி, ஏனையோரும் இவற்றால் நற்பயனடைந்து மகிழ்ச்சியடைய, ஏற்ற வாய்ப்பை அவர்களுக்களிப்பது நமது கடமை.

நமது குருமாரிற் பலர், தமக்கே உரித்தான பணிகளில்-பயனுள்ளவாறு ஈடுபடமுடியாமல் இருப்பதற்குக் காரணம் - சபையார் செய்ய வேண்டிய கடமைகளைத் தாமே செய்து வருவதால் தான் என்பது மிகையாகாது. எனவே, குருமாரும் சபையாரும், திறந்த மனப்பான்மையுடன் ஒருவரோடொருவர் பேசி - உரையாடி, சபைப்பிரச்சனைகளை தம் சபை மக்களோடு கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்பது சிறந்தது. கூட்டுத் தீர்மானத்திற்கு சபையில் அமோக வரவேற்பு இருக்கும். கூட்டாக எடுத்த தீர்மானங்களைச் செயல்படுத்த மக்கள் பக்க பலமாக இருப்பார்கள்.

ஒரு சபையின் குருவானவர், தனது பணிகளை - சபையின் நலனுக்காகவும், தான் பணியாற்றும் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் செயலாற்ற-சபை மூப்பர்கள் அவருக்கு உறுதுணையாயிருத்தல் வேண்டும். அவரது ஆக்க வேலையில், தமது போதகருடன் சேர்ந்து செயலாற்றுவதே சிறப்பு.

எனவே, குருமார் தமக்கெல்லாந் தெரியும் என்றும் - சபையார் தமது பணிகளில் தலையீடப்படாதென்றும் கூறித் தனிமையாகச் செயலாற்ற முனைவது தவறு. அதே வேளையில், சபையார் தங்கள் குருவை ஓயாமல் குறை கூறிக்கொண்டிராமல்-அவரின் பலவீனங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டு - அவருக்காக விடாமல் செபித்து, அவரை ஊக்கப்படுத்துவது நல்லது. - 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு', -

கூட்டாகத் திருப்பணியாற்றுவதின் சிறந்த முன்மாதிரியாக இயேசு பெருமான் விளங்கினார். தமது சீடருக்கு, கூட்டுப்பணியில் ஈடுபடுவதற்கு வேண்டிய பயிற்சி அளித்தார். ஆதித் திருச்சபையில் - தூய ஆவியரின் கூட்டுறவினால் அப்போஸ்தலரும், கிறிஸ்தவ அடியாரும் தாம் சென்ற இடமெல்லாம் கூட்டாகத் திருப்பணியாற்றி இறைவனை மகிமைப்படுத்தினர் என்பது திருச்சபை வரலாறு கூறும் உண்மை.

கடந்த சில நாட்களாகத் தூய ஆவியர், நம்மை ஒன்றாக இணைத்து ஐக்கியத்திற்குள் கொண்டு வருகிறாரென்ற உண்மையை அனுபவித்தோம். குருமாரும் சபையாரும் - இத்திவ்விய ஐக்கியத்தில் ஒன்றுபட்டு தமது சபைகளில் கூட்டாகச் செயலாற்றும் போது - திருச்சபையில் இருக்கும் பிளவுகள் அகன்று - புத்துயிர் பெற்று, புதுப்பெலனுடன் திகழும் இதற்காக நாம் ஒன்றுபட்டு செபிப்போம்.

## நெல்சன் மண்டலே

கடந்த காலக்சர்ப்பத்தினுள்ளே இருந்து நிகழ்காலம் எடுக்கின்றது என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். நியாயமான உலக விடுதலைப்போராட்டங்கள் தோற்றதில்லை என்பதை வரலாறு கோடிட்டுக்காட்டியுள்ளது. அந்த வகையில் இந்நூற்றாண்டின் விடுதலைப்போராட்டங்களுக்குக் கலங்கரை விளக்கமாக அமைபவர் நெல்சன் மண்டலே 10-05-94இல் தென்னாபிரிக்கா ஜனாதிபதியாக நெல்சன் மண்டலே பதவியேற்றுள்ளார். அவரைத்தெரிவு செய்ய, பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வெள்ளையர் கறுப்பர் என வேறுபாடு இன்றி அருகருகே இருந்த காட்சியைக் கண்ட கறுப்பினப் பிரதிநிதிகள் "அந்த நாள் வந்தது "எனக்கண்ணீர் மல்கினர் என்று உலகின் தொடர்புச் சாதனங்கள் பறை சாற்றின. அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மரண வைபவத்தின் பின் இவ்வளவு வெளிநாட்டுத்தலைவர்கள் கூடிய ஒரு வைபவமாக நெல்சன் மண்டலேயின் பதவியேற்பு வைபவம் அமைந்திருந்தது. உலகம் தனது மனச்சாட்சியைத்திறந்து காட்டிய நாளும் அன்றேயாகும்.


ஏ.குமாரவேல்
யாழ்ப்பாணக் கல்லூரி


இந்தளவு பிரபல்யம் பெற்ற அந்த மண்டலேயின் வாழ்க்கைப் பாதை முட்கள் நிறைந்திருந்த பாதையாகும். 1918ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் பிறந்த நெல்சன் மண்டலே, சாதாரண மனிதப்பிறப்பு நிகழ்வு போன்றே பிறந்தார். ஆனால் 342 வருட அடக்குமுறை உடைக்க அவர் தன்னை அர்ப்பணிக்கப்போகின்றார் என்பது எவருக்கும்தெரியாது. கல்வியில் வல்லவராக வளர்ச்சியடைந்து வருகையில் 1940ஆம் ஆண்டு அவர் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்றார் 'கறுப்பின மக்களின் விலங்கறுக்க மாணவப்பருவத்திலேயே உரியவனாக மாறியவர் மண்டலே. தன்வாழ்க்கையை அவ்வினத்திற்காக அர்ப்பணித்தார். வெள்ளையர் கறுப்பினத்தவரை கல்வியற்றவர்களாக்கி, புத்திஜீவிகள் தோன்றுவதைதடுக்க தம்மாலான எல்லா வழிகளையும் கடைப்பிடித்தனர். ஒரு இனத்தை அடக்க முனையும் மறு இனம் அந்த இனத்தின் கல்வியை சீர்குலைத்து அறிவற்றவர்களாக்குவது வரலாறு கண்ட கசப்பான உண்மையே சிங்களப்பேரினவாதம் இதைச் செய்து வருகின்றது. இதையொத்த நிகழ்வு தென்னாபிரிக்காவில் நீண்ட காலத்திற்கு முன்பே உருவாகிவிட்டது. இதனை உடைத்தெறிய 1944ல் நெல்சன் மண்டலே இளைஞர் இயக்கம் ஒன்றை உருவாக்கினார். பாடசாலைகள் திட்டமிட்டே அமைக்கப்படாதிருந்த நிலையில் தபால் மூலம் கற்பிக்கும் ஒரு முறையை மண்டலே உருவாக்கினார்.

அடக்குமுறையை எந்தெந்த உருவத்தில் எதிர் கொள்ள முடியுமோ அந்தந்த உருவத்தில் அதனை எதிர்கொள்ளத்தயாரானார். நெல்சன் மண்டலேயின் போராட்டத்தை அடக்க முனைந்த வெள்ளையர் இறுதியில் 1964ஆம் ஆண்டு அவரை சிறையிலடைத்தனர். ஒரு வருடமா, இருவருடமா, கால் நூற்றாண்டுக்கு மேலாக 27 வருடங்கள் அவர்சிறையிலிருந்தார் அவரை விடுதலை செய்யுமாறு உலக நாடுகள் பல தடவை கோரிக்கைவிட்டன. வெள்ளையர் அரசு இறங்கவில்லை. உலகின் வற்புறுத்தலை சமாளிக்க நிபந்தனையுடன் விடுதலை செய்யத்தயார் என வெள்ளையர் அரசு கூறியது. மண்டலே நிராகரித்தார். அந்நீதுக்கும் தர்மத்திற்கும் இடையே போர். எனவே நிபந்தனை விதிக்க முடியாது அவ்விடுதலை எனக்குத்தேவையில்லை. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் போராடிய விடுதலையும் எனக்கு உரியது தான் [illegible] சிறையிலிருக்கையில் [illegible] கொண்டே இருப்பார் என அவருக்கு வாயில் காப்பாளனாக இருந்த சிறை உத்தியோகத்தர் இப்போது குறிப்பிடுகின்றார். பொருளாதாரத்தடையை உலக நாடுகள் மேற்கொள்ள உலகின் மாட்சிமை குமுறத்தொடங்க வெள்ளையரசு 1991ல் அவரை விடுதலை செய்தது. பேச்சுவார்த்தைக்கும் அவர் தயார் ஆனார். போராடவும் தயாராகவே இருந்தார். இன்று தமிழீழத்தின் நிலையும் இதுவே பேச்சுவார்த்தை மூலம் தென்னாபிரிக்க வெள்ளை ஜனாதிபதி கிளார்க்கும் மண்டலேக்கும் இடையே இணக்கமும், தீருமா? என இருந்த பிரச்சனையை, மண்டலே கையாண்ட விதமும், நீதியின் முன் தலைவணங்க வேண்டியிருந்த கிளார்க்கு உலகசமாதான நோபல் பரிசைப்பெற்றுக்கொண்டனர்.

மண்டலே ஜனாதிபதியானார். பிரச்சினை தீர்ந்தது என நாம் கருதினால் அது பிழையான கருத்தாகவே இருக்கும். இனிமேல் தான் மண்டலே அதிக பிரச்சினைகளை எதிர் கொள்ளப்போகிறார். 54இலட்சம் வெள்ளையர் 34 இலட்சம் கலப்பினத்தவர். 12இலட்சம் இந்தியர் 400இலட்சம் கறுப்பினத்தவர் கொண்ட நாடே தென்னாபிரிக்கா. தங்கமும், வைரமும் ஒளி வீசும் நாடு அது அதை அபகரித்துக்கொண்டவர் வெள்ளையர். 60% மான விவசாயநிலங்கள் வெள்ளையரிடம்உள்ளன இலங்கையைப் போல் ஏறக்குறைய 20 மடங்கு பெரிய நாடு தென்னாபிரிக்கா. கைத்தொழிற்சாலைகள் வெள்ளையருடையது வறிய கல்வியறிவு குறைந்த மக்கள் கூட்டமாக கறுப்பினத்தவர் உள்ளனர். கறுப்பினத்தவருக்குள்ளேயும் பல பிரிவுகள் உள்ளன. மண்டலேயின் பரம அரசியல் எதிரி புத்த லெஸ்லி தேர்தல் வரை இவர் பல பிரச்சினைகளை ஏற்படுத்தினர் ஆனால் மண்டலே தேசிய அரசை அமைத்திருக்கிறார். வெள்ளையரை அடக்க மாட்டேன். எனக்கூறுகின்றார். அடக்கப்பட்டவனாக இருந்தவர். அடக்கும் ஸ்தானத்திற்கு உயர்ந்த போதும் பழிவாங்கல் இல்லை. அவர்களை அணைத்துச்செல்வேன் எனக்கூறுகின்றார். கறுப்பு மக்களுக்குரிய சாதாரண வாழ்க்கைவசதியைவழங்க 2000கோடிடொலருக்கு மேல் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார முதன்மையை கறுத்தவருக்குக்கொடுக்க வேண்டியது அவசியமே. அதனை வெள்ளையர் எவ்வளவு தூரம் ஜீரணிப்பர் ? வலது சாரி வெள்ளையர் ஆட்சி மாற்றத்தை எதிர்த்துள்ளனர். கறுப்பினத்தவருக்கிடையேயான பிரிவுகளையும் இணைத்து, வெள்ளையரையும் அணைத்து செல்வதென்பது மிகச் சிரமமே ? அல்லது எதிர்காலத்தில் வெள்ளையர் தமக்கென ஒரு பிரிவை, தனி நாட்டை அமைக்கப் போராடுவார்களா ? மீண்டும் தென்னாபிரிக்கா குமுறுமா ? இவை எதிர்காலம் அளிக்க வேண்டியபதில்கள். ஆனால் சாதுரியமான மண்டலே வெற்றி நடைபோட உலகம் உதவ வேண்டும்.

## வருந்துகிறோம்

கடந்த மாதம் 06-05-94 இல் வெளிவந்த உதயதாரகை இதழில் -- "கணிகையும் கடவுளும்" என்ற தலைப்பில் 'நாவேந்தன்' அவர்கள் எழுதிய சிறுகதை பிரசுரிக்கப்பட்டதையிட்டு வருத்தமடைகிறோம் இக்கதை எமது பார்வைக்குக் கொண்டு வரப்படாமல்--நேராக அச்சகத்திற்குப் போய்விட்டது. இதற்காக வருந்துகிறோம். இக்கதையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறோம்.

தமிழ்ப் பத்திராதிபர்
உதயதாரகை.

PUBLIC LIBRARY JAFFNA NALLUR BRANCH LIBRARY.

EDITORIAL

# RENEWAL

Spirit and flesh are two opposing forces of equal strength The flesh tries to bind us to this world whereas the Spirit liberates us. One cannot lead a spiritual life when he is enslaved by the flesh which is in him. One must be spiritually renewed if one wants to be released from the shackles flesh.

St. Paul warns that if we are in the flesh we cannot please God (Rom 8.8) Further the way of the flesh leads to death Carnally minded people can never be satiated. They become selfish and try to grab everything for themselves. In doing so they become power hungry. They are mesmorized by the world with all its glory. They do not realize that all that glitters is not Gold. They think they can have abundant life if the needs of the flesh are satisfied. But actually they lose life in trying to gain it.

People are dismayed and become frustrated when they learn that the world with all its glory has not offered what they desired. Such people indulge in self-assertion and suffer from anxiety. Carnally minded people tend to be self-righteous. They involve in aggression towards other people and even turn to be murderers. Ultimately they die in their own sins. What a pitiable life!

Since, to be carnally minded is death we must be spiritually renewed. Renewal can take place only if we repent and allow the Holy Spirit to work in us. If the Holy Spirit dwells in us Christ himself lives in us and our spirits are alive because of righteousness of Christ. Our mortal bodies are also given life. In other words both our bodies and spirits are revived through the Holy Spirit which is in us.

We become children of God because God's spirit dwells in us. If we are the children of God we become heirs of God and joint heirs with Christ. Because we are heirs of God we have abundant life. Even when we have nothing we lead a contented life. This is because a spirit filled man is prepared to lose all what the flesh offers him. Everything he receives is a blessing of God. Because he has no desires he is always satisfied.

The Spiritual man also is willing to suffer - suffer for the sake of righteousness. The Spirit filled man feels burdened to unshackle all those who are oppressed by unjust laws of the world, liberate all who are prisoned by unrighteousness. Christ came into this world to suffer and to lay down his life so that we may have life abundantly Similarly one in whom Christ lives will never hesitate to suffer, so that others may be liberated.

Suffering is not the end. If we suffer with Christ we will also be glorified with him. God who raised Jesus Christ from death will raise us up also for the sake of Holy Spirit which dwells in us. Let us threefore be renewed by the Holy Spirit.

A. A. P.

## Rev. Dr. S. X. Thaninaygam Memorial Lecture

The Bishop of Jaffna Diocese of the Church of South India the Rt. Rev. Dr. S. Jebanesan delivered the Second, Fr., Rev. Thaninayagam Memorial Lecture in the St. Fracis Seminary, Jaffna on 6th May 1994, He spoke on the subjects 'Ambasadors of Tamil from Noblties to Thaninayagam.

Bishop Jebanesan traced the contributions made by Roman Catholic & Protestant Missionaries like De Nolte, Beski Hendrich Blucchan Phillips Baldaeus, Myron Winslow, H. R. Horisiugtan Caldwell and G U. Pope

Then he elaborated the contributions made by Rev. Dr. F. X. Thaninayagam. People should remember and continue to do the good work done by Fr. Thaninayagrm adigal he said.

## Orbituary

### Mr. Marcus Navaratnarajah

We are sorry that Marcus died of heart attack on 14th May in Canada on the day of his birthday. He was on the teaching staff Jaffna College and actively involved in Jaffna College YMCA. He used to organise Camps and workshops for Jaffna College Students. He had been a YMCA Secterary at Jaffna YMCA, National Y (71-74) and Salisbury YMCA Hong Kong. If you wish to contact h wiisfe Thivyam and daughter Ezakshi you may write to the following address.

Mrs. Thivyam Navaratnarajah
17-3071 Sprinfield Drive Ridchman BC V 7 E IYD Canada.

## Someone ..........

(Continued frome page 1)

The organization's quarterly newsletter, PBI/USA REPORT, for March 1994, Carries the ellowing account;

It is encouraging to know that there is an organized group of young volunteers whose main objective is to be present as international witnesses, wherever people are known to be in danger. The main office of the organization is at 347 Dolores Street, Apt. 228, San Francisco, Califonia 94110 (Tel 415—864—7242. The Quarterly, can be addressed at 340 Midland Ave., Syracuse, New York 13202-3407 The PBI Statement of Purpose reads:

Peace Brigades International works to establish justice and peace in the world through nonviolent action. To do this we send unarmed International peace teams, when invited, into areas of repression or Conflict, By so doing we challenge the belief that violent institutions and warfare must inevitably dominate human affairs. PBI demonstrates that as International volunteers, citizens can act boldly as peacemakers when their governments cannot or will not. Through its activities, PBI learns about, develops and models forms of non-violent action in the spirit of Gandhi's experiments with truth.

The Sri Lankan team is currently composed of people mainly from Asian-Pacific countries- Japan, India, Australia and NewZeland But one U S citizen was part of the team in late 1993 and January- Mark Hoolihan of Buffalo NewYork Mark writes that when he first arrived, he felt overwhelmed with having to run an office, write reports and maintain presences, particularly as requests for presence sometimes arise with no notice:

One such occasion involved the abduction of serveral Tamil youths in Colombo by unknown militia in the middle of the night. We were asked to visit one youth who had narrowly missed being taken and feared they would return. we responded to this request at night not knowing whether we would also encounter the same 'armed men in unmarked vehicles.' As it turned out this wasn't the case and arrangements were made for the Tamil man in a safe haven

One of the more difficult experiences I've had was when we were summoned to the dwelling of a family whose son had died while in Police custody. Unbeknowast to us, it was the day of the funeral. This wase poor family and the funeral was being conducted at the family residence. We offered to retu n at

(Continue next issue)

## A Success ......

(Continued from page 1)

According to Dr. S. Radhakrishnan in olden days, teachers of India were themselves libraries and they were held in the highest esteem. This incidently seems to be the case of Kerala too, it was first formed by some teachers of aided schools who were Congress men at heart, but as the movement gathered momentum, they became Communist sympathisers. resultiug in the first Communist ministry in the history of Asia.

The library movement played an important part during the freedom struggle too. Many of the political leaders in the State started their lives and social service through the library movement. The period was also marked by great political turmoil, just before India got freedom.

But to ensure a smooth and effective running of the libraries without losing its democratic set-up, a library bill was the much needed goal. Right from the beginning of this movement, this need was felt and almost all the leading newspapers in Kerala like Mathrubhoomi, Kerala Kaumudi and Janayugam had demanded enactment of a law for the libraries. Its leaders from Sir C. P. Ramaswami Iyer, the Dewan of Travancore, to the present education minister Mohammad Basheer, have tried to enact a legislation for streamlining the functions of all libraries.

However, by the time the proposed legislation reached the select committee, the government would fall. This led to an ironic statement that if you want to pull the government down just push the Grandhasala legislation Act. So the enactment of the bill remained an unfulfilled aspiration, a Promise kept in abeyance. Each time Assembly has been prorogued. the bill had to be newly prepared and presented before the house. From this fatal irony. It was to the credit of the socialist leader K. Chandrasekharan of of Janata Dal who finally beairing all odds, sitting day and night discussing almost 1600 amendments, got the act passed unanimously in 1989 as the Kerala Public Library (Kerala Grandhasala Sangham) Act. The only other act passed in this manner on record is the Land Reforms Act both executed during the Communist regime. The library movement in Kerala took shape though three different currents-through the three provinces of Kerala-Travancore, Kochi and Malabar. All the three had visible difference. Besides the Travancore library movement, Kochi had its own library movements while Malabar under the Madras presidency had perhaps the best thrust politically and socially out of these rarer trends.

-Harrison John Theophilus

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/140/89 News Printed for the Jaffna Diocesan of The Church of South India The American Ceylon Mission Press. 132 1st Cross Street. Jaffna on Friday the 20th of May 1994 and Published by Mr T. A. [illegible] Diocesan Office, Vaddukoddai